(2) உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்குக் கோடை விடுமுறையை அனுபவிக்க அனுமதி வழங்கியதால் தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் எற்பட்டுள்ள இன்னல் குறித்து.

THIRU K.S. GANAPATHI : Mr. Deputy Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the direction of the Director of School Education in his proceedings F.W.L.Dis. 52897/D-3/74, dated 4th June 1974 to permit the non-teaching staff of aided High Schools to enjoy the summer vacation in full and the resultant hardship caused to hundreds of aided High Schools in preparing and publishing the annual results, audit etc., that are attended to during vacation.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் அரசுப் பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான விடுப்புச் சலுகைகள் அனைத்தும், தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் பொருந்துமென ஏற்கெனவே அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்த ஆணையின்படி உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களும் விடுமுறைத் துறையைச் சேர்ந்தவர்களாவார்கள்.

பொதுவாக மாநில அரசுத் துறைகளில் முறையான பணி செய்பவர்களுக்குக் கொடுக்கப்படும் ஈட்டியவிடுப்பு 11 நாட்களுக்கு ஒரு நாளாகும். அதாவது ஆண்டு ஒன்றுக்கு 33–2/11 நாட்களாகும். ஆனால் விடுமுறைத் துறைகளில் பணியாற்றுபவர்கள் ஒவ்வொரு ஆண்டும் அத் துறைகளில் கொடுக்கப்படும் நீண்டகால விடுமுறையை அனுபவிக்க உரிமையுள்ளவர்களாவார்கள். ஆதலின் அவர்களுக்கு, ஏனைய துறைகளில் பணியாற்றுபவர்களுக்குக் கொடுக்கப்படும் மொத்த விடுப்பு நாட்களான 33–2/11–ல் 30 நாட்கள் குறைத்து ஆண்டுக்கு 3–2/11 நாட்கள் மட்டுமே ஈட்டிய விடுப்பாக அளிக்கப்படுகிறது.

நடைமுறைகளிலுள்ள விதிகளின்படி விடுமுறைத் துறையைச் சேர்ந்தவர்கள் பொதுவாக முழுவதுமோ அல்லது விடுமுறையின் ஒரு பகுதியையோ அனுபவித்தவர்களாகக் கருதப்படுவர். விடுமுறைக்காலம் 15 நாட்களுக்கு மேற்படின் விடுமுறையின் ஒரு பகுதியையோ அல்லது முழுவதுமோ அனுபவிக்காது இருக்குமாறு உயர் அதிகாரிகளிடமிருந்து பொது அல்லது சிறப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தாலொழிய விடுமுறைத் துறையைச் சேர்ந்தவர்கள் விடுமுறையை அனுபவித்ததாகக் கருதப்படுவர். எந்தப் பணியாளரும் விடுமுறை அனுபவிப்பதைச் சாதாரணமாகத் தடுத்தல்கூடாது. அவ்வாறு தடை செய்யப்படுவது அரசிற்குக் கூடுதல் செலவை விளைவிக்கும். ஏனெனில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஈட்டிய விடுப்பு நாட்கள் அதிகரிக்கும். மேற்கூறப்பட்டுள்ள நிலைமையை பள்ளிக்கல்வி இயக்குநர் (தமது ஆணை எப்.டிபிள்யு.எல். எண் 52897/டி3/74, நாள் 4–6–1974) பள்ளி ஆய்வு அலுவலர்களுக்கு 4–6–1974–ல் எடுத்துக்கூறியுள்ளார்கள். ஆகையினால் மேற்படி சுற்ற

றிக்கையிலுள்ள ஆணை நடைமுறையிலுள்ள விதிமுறைகளுக்கு ஒத்ததே. உதவி பெறும் பள்ளிகளிலுள்ள ஆசிரியரல்லாத ஊழியர்களால் செய்யப்பட வேண்டிய அலுவலகப் பணிகளை அரசிற்குக் கூடுதல் செலவு இல்லாமல் நிறைவேற்றச் செய்வது பள்ளித் தலைவர்களின் கடமையாகும்.

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவரவர்களே, என் கேள்விக்குப் பதில் அளிக்கப்படவில்லை. ஏனென்றால், இப்போது பள்ளிகள் அனைத்திலும் விடுமுறை நாட்கள் தொடங்கிவிட்டன. அலுவலர்கள் வேலை செய்ய வரமாட்டேன் என்று மறுக்கின்றார்கள். இப்போதுள்ள விதிமுறைகளின்படி, நாங்கள் விடுமுறையை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லுகின்றார்கள். ஆனால் இந்த விடுமுறை நாட்களில்தான் நடந்துமுடிந்த தேர்வுகளுக்கான முடிவுகளை முறைப்படுத்தி, வெளியிட வேண்டும். ஆனால் ~~அவர்கள்~~ என்றைக்குப் பள்ளி முடிந்ததோ அன்றே அவர்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள். மாவட்டக் கல்வி அதிகாரியுடைய அனுமதியோடு ஒருவரை வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் அவர்கள் அதனால் அரசுக்கு அதிகச் செலவு வரும், ஆகவே நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிடுகின்றார்கள். தலைமை ஆசிரியரும் வரத் தேவையில்லை. பிறகு பள்ளி அலுவல்கள் எப்படி நடக்கும் என்பதை யோசித்து, இதை மறு பரிசீலனை செய்து, அவர்களுக்கும் மற்ற என்.ஜி.ஓ.க்களுக்கு உள்ளதைப் போலவே, கொடுத்தால்தான் இந்த நிலைமையை மாற்ற இயலும் என்ற அடிப்படையில், இதை மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4–40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவது போன்ற சங்கடங்கள் இருக்குமேயானால், அதுபற்றி மறுபரிசீலனை செய்து, எந்த அளவுக்கு அந்தக் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு வழிவகை செய்யலாமோ அந்த அளவுக்குச் செய்யலாம். அதைப்பற்றித் தனியாகப் பரிசீலனை செய்யலாம்.

திரு. கே. எஸ். கணபதி: இந்த ஆண்டே அந்தச் சிக்கல் ஏற்பட்டுவிட்டது. இப்போது பள்ளிகளில் ஒருவரும் வேலை செய்ய வரமாட்டேனென்று சொல்லுகிறார்கள். இது உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. எனவே இது உடனடியாகக் கவனிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: விடுமுறை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. அங்கே இருக்கும் அலுவலாளர்களுக்கும் முழு விடுமுறை அளித்து விட்டால்,

[டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன மாதிரி, அடுத்த ஆண்டிற்கு எந்தவிதமான ஏற்பாடுகளும் நடைபெறாது. எல்லோரையும் போன்று, இவர்களும் கை வீசிக்கொண்டு வந்தால், அடுத்த ஆண்டு பணியைத் துவக்குவது கஷ்டமாக இருக்கும். ஆனால் விடுமுறை நேரத்தில் வேலை பார்க்க வேண்டியிருந்தால், மேல் அதிகாரிகளிடத்தில் முன்னாலேயே உத்தரவு பெற்றுக்கொள்ளலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு அவர்களுக்கு வாய்ப்புகளும், வசதிகளும் தரப்பட்டிருக்கின்றன. மேலும் அவர்கள் ஈட்டிய விடுப்பும் பெறலாமென்ற அளவுக்குச் செய்தால் தான் முடியும். இதிலே ஓரளவுக்குச் செலவு கூடுதல் ஆனாலும், இது தாங்கிக்கொள்ளக்கூடிய செலவாகத்தான் இருக்கக்கூடும். ஆகவேதான் மறுபரிசீலனை செய்து இந்தச் சங்கடங்கள் தீரவும், பள்ளிகளின் நிர்வாகம் ஒழுங்காக நடைபெறவும் என்னென்ன மேற்கொள்ள வேண்டுமோ அவற்றை இந்தத் துறை மேற்கொள்ளுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

4. அரசாங்க உறுதிமொழிக் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கையை அளித்தல்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அரசாங்க உறுதி மொழிக் குழுவின் இருபத்தி ஐந்தாவது அறிக்கையை தங்கள் அனுமதியுடன் அவைக்கு அளிக்கிறேன்.

5. அரசின் தீர்மானம்.

தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை நடத்துதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே,

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 19-ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை 1975-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 19-ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.